# உங்கள் சந்ததியும் உங்கள் நாமமும் நிற்கும். ஏசாயா 66 : 12

**நான் படைக்கப்போகிற, புதிய வானமும், புதிய பூமியும்**
**எனக்கு முன்பாக நிற்பது போல, உங்கள் சந்ததியும்,**
**உங்கள் நாமமும் நிற்கும் – என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே,

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுன் இனிய நாமத்திலே என் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாதத்திலே தேவன் இரண்டு ஆசீர்வாதங்களை உங்களுக்குக் கொடுக்கிறார்.

**உங்கள் சந்ததி – நிற்கும்**
**உங்கள் நாமம் – நிற்கும் என்பதாக அல்லேலுயா.**

ஒரு ஆசீர்வாதத்தை மட்டும் இன்று சிந்திப்போம். ஆதியாகமம் புத்தகத்தை படித்துப்பார்க்கும் போது சந்ததிக்குரிய ஆசீர்வாதம் நன்கு புலப்படுகிறது.

1. கர்த்தர் ஆபிரகாமுக்கு தரிசனமாகி, உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன் – . **ஆதி 12 : 7ல் கூறுகிறார்.**
2. உன் சந்ததியை பூமியின் தூளைப் போல பெருகப் பண்ணுவேன் **ஆதி 13 : 16 ல் கூறுகிறார்**
3. உன் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப்போல், இவ்வண்ணமாய் இருக்கும் – என்பதாக. **ஆதி 15 : 5 ல் கூறுகிறார்.**
4. உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன், அது பெருகி எண்ணிமுடியாததாயிருக்கும் என்பதாக. **ஆதி 16 : 10 ல் கூறுகிறார்.**
5. நீ பரதேசியாய் தங்கி வருகிற கானான் தேச முழுவதையும், உனக்கும் உன் பின்வரும் உன் சந்ததிக்கும் நித்திய சுதந்திரமாகக் கொடுத்து, நான் அவர்களுக்கு தேவனாயிருப்பேன். **ஆதி 17 : 8 ல்கூறுகிறார்**
6. நான் உன்னை ஆசீர்வதிக்கவே, ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன். நீ என் சொல்லுக்கு கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் – என்பதாக **ஆதி 22 : 18 ல் கூறுகிறார்.**
7. கடைசியாக , **ராஜாக்களும் உன் சந்ததியில் பிறப்பார்கள் – ஆதி 35 : 11 ல் கூறுகிறார்.**

**எத்தனை மகிழ்ச்சி.**

ராஜாக்களும், உன் சந்ததியில் பிறப்பார்கள்.

**ஆதலால் தான் சங்கீதம் 22 : 30 கூறுகிறது.**

ஒரு சந்ததி அவரை சேவிக்கும், தலைமுறை, தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி எனப்படும் என்பதாக.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே,

உங்களுடைய சந்ததி, ஆண்டவருடைய சந்ததி எனப்படவேண்டும்.

**மல்கியா 2 : 15 கூறுகிறது** பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார் ? தேவ பக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே

அன்று மரியாள், இதோ இதுமுதல் எல்லா சந்ததிகளும் என்னை பாக்கியவதி என்பார்கள் – என்பதாக **லூக்கா 1 : 48ல்**

இந்த ஆசீர்வாதம் உங்களுக்கும் வேண்டுமா ? நீங்கள் பாக்கியவானும், பாக்கியவதியுமாக மாறவேண்டும்.

**பக்தன் பாடுகிறான்.**

நானும், என் எல்லாமும், இயேசுவுக்கே, சுவிசேஷத்திற்கே

இப்படிப்பட்ட அர்ப்பணிப்பு நமக்குள் வரும்பொழுது, தேவன் கொடுக்கும் வாக்குத்தத்தம்,

**ஏசாயா 59 : 21**

**உன் மேலிருக்கிற, என் ஆவியும், நான் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும், உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லை – அல்லேலுயாயா.**

**உங்கள் சந்ததியும் உங்கள் நாமமும் நிற்கும் – ஆமென்.**

யாத்திராகமம் 20 : 24 – நான் என் நாமத்தை பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும், உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன்.

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே, உன் நாமம் நிற்பதற்கு, ஒரே ஒரு வழி. இயேசுவின் நாமத்தை உயர்த்துவதும், போற்றுவதும், புகழ்வதும், பறைசாற்றுவதுமாகும். அப்பொழுது, **உங்கள் சந்ததியும் உங்கள் நாமமும் நிற்கும்.**